# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● டிசம்பர் 19, 2017 Weekly E-paper ● December 19, 2017


### குஜராத்தில் பாஜக

# வெற்றியன்று வீழ்ச்சியின் தொடக்கம்!

● சுப.வீரபாண்டியன்



குஜராத், இமாச்சல பிரதேஷ் ஆகிய மாநிலங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ள பாஜகவிற்கு முதலில் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம். இமாச்சலில் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரசை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்திருக்கிறது பாஜக. இன்னொரு புறம், பல ஆண்டுகளாகத் தொடர்ந்து குஜராத்தில் ஆட்சி நடத்தி வரும் அக்கட்சி, இம்முறையும் வெற்றி பெற்றுள்ளது. எனவே இரண்டு வெற்றிகளுக்கும் நம் வாழ்த்துகள்!

எனினும், குஜராத்தில் பாஜகவிற்குக் கொண்டாடத்தக்க வெற்றி கிடைத்துவிடவில்லை. அதைப்போல அங்கு காங்கிரசுக்கு மிகவும் சோர்ந்து போகத்தக்க தோல்வியும் கிடைத்துவிடவில்லை.

குஜராத் தேர்தல் புள்ளி விவரங்களைக் கவனித்தால், பாஜக இத்தேர்தலில் தேய்ந்திருப்பதையும், காங்கிரஸ் வளர்ந்திருப்பதையும் அறிய முடிகிறது. 2007 முதல், குஜராத் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைப் பார்க்கலாம்:

| வருடம் | பாஜக | காங்கிரஸ் |
|---|---|---|
| 2007 | 117 | 59 |
| 2012 | 115 | 61 |
| 2017 | 99 | 77 |

இதனைக் காட்டிலும் 2014 நாடாளுமன்றத் தேர்தலை ஒப்பிட்டுப் பார்த்தால், மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு தெரிகின்றது. அத்தேர்தலில், பாஜக அனைத்து (26) நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றிபெற்றது. சட்டசபை வாரியாகக் கணக்கெடுத்தால், 182 தொகுதிகளில், 165 தொகுதிகள் பாஜகவை முன்னிறுத்தின. மோடி உட்பட மூவர் ஐந்து லட்சத்திற்கும் கூடுதலான வாக்குகள் வேறுபாட்டில் வெற்றி பெற்றிருந்தனர். எல்.கே.அத்வானி, 4.80 லட்சம் வாக்குகள் வேறுபாட்டில் வென்றிருந்தார்.

இப்போது எல்லாம் தலைகீழ் ஆகிவிட்டது. பல இடங்களில், மிகக் குறைந்த வாக்குகள் வேறுபாட்டில், தட்டுத் தடுமாறித்தான் வெற்றி பெற்றுள்ளனர். மோடியின் தலைக்கு வந்த ஆபத்து, அவர் தலைப்பாகையுடன் போயிருக்கிறது. 150 இடங்களில் வெற்றிபெறுவோம் என்றார் அமித்ஷா. 100 இடங்களைக் கூடப் பெற முடியவில்லை. பாகிஸ்தானுடன் காங்கிரசுக்குத் தொடர்பு என்றார் மோடி. எதுவும் எடுபடவில்லை.

பொருளாதார அடிப்படையில் குஜராத் எப்போதும் வளமான மாநிலம் என்பதை அறிவோம்.

ஆனால் பணமதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி வரி ஆகியவை அங்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தி விட்டன. நாடு முழுவதும், நில விற்பனைத் தொழில், கட்டுமானத் தொழில் ஆகியவை மோடி அரசின் நடவடிக்கைகளால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. அது குஜராத்தில் சற்றுக் கூடுதல் என்றே கூற வேண்டும். அதுவே குஜராத் மக்களின் மனமாற்றத்திற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

தங்கள் மாநிலத்துக்காரர் பிரதமராக இருக்கும் வேளையில் அவரைத் தோற்கடித்துவிடக் கூடாது என்ற எண்ணம் அங்கு பலரிடம் இருந்திருக்கக்கூடும். அதுவே அவர்களை இந்த அளவேனும் வெற்றி பெற உதவியுள்ளது.

எப்படியிருந்தாலும், குஜராத்தில் பாஜகவிற்குக் கிடைத்திருப்பது வெற்றியன்று, வீழ்ச்சியின் தொடக்கமே! ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## நூல்கள் வெளியீட்டு விழா



சென்னையில் நடைபெற உள்ள பின்வரும் நூல்கள் வெளியீட்டு விழாக்களில், தோழர் சுபவீ கலந்துகொண்டு உரையாற்றுகின்றார்.

- 22.12.2017 - மாலை 6 மணி - சென்னை, எழும்பூர், இக்சா மையம்
  **கவிஞர் குமரித் தமிழரசனின் கவிதை நூல்**
- 23.12.2017 - மாலை 6 மணி - சென்னை, கவிக்கோ அரங்கம்,
  **கவிஞர் தமிழ்மகனின் அறிவியல் நாவல்**
- 24.12.2017 - காலை 10 மணி - சென்னை, கவிக்கோ அரங்கம்,
  **அறிஞர் கு.ச.ஆனந்தனின் 'மாநில சுயாட்சி' நூல்**

## செங்கல்பட்டு – திருவள்ளுவர் மன்றம்




**17.12.2017** மாலை செங்கல்பட்டில் நடைபெற்ற திருவள்ளுவர் மன்ற வெள்ளி விழாவில் தோழர் சுபவீ நிறைவுரையாற்றினார். மேடையில் பழ.கருப்பையா அமர்ந்துள்ளார்.

## திண்டுக்கல் ஆர்ப்பாட்டம்




**த**மிழ்நாடு தேர்வாணயத் தேர்வில் வெளி மாநிலத்தவரை அனுமதிக்கும் தமிழக அரசைக் கண்டித்து 14.12.2017 அன்று திண்டுக்கல்லில், தமிழ்நாடு உரிமை மீட்புக் கூட்டமைப்புச் சார்பில் நடந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்கள்.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பிரதமாரா? விருந்தினரா?

**செ**ன்ற ஆண்டு டிசம்பரில் சென்னையைச் சுருட்டிச் செயலிழக்கச் செய்தது வர்தா புயல்.

இந்த ஆண்டு ஓகி புயல் தென்கோடிக் கன்னியாகுமரியில் கோர ஆட்டம் ஆடிச்சென்றது.

மக்களின் வாழ்வாதாரங்கள் அனைத்தும் நிலைகுலைந்து போனது அங்கு.

வயல் காட்டில் விளைந்த நெற்பயிர்கள், தென்னை, வாழை, இரப்பர் மரங்கள் எல்லாம் அடியோடு வீழ்ந்து அழிந்தன.

எல்லாவற்றையும் விடக் கொடுமையான செய்தி மீனவப் பெருமக்கள் குறித்தது.

கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் நூற்றுக் கணக்கில் கரை திரும்பவில்லை.

தப்பித்து கரை திரும்பிய சிலரைத் தவிர ஏனையோரின் நிலை என்ன என்பது குறித்து நல்ல செய்தி இல்லை.

கடலில் பிணங்கள் மிதப்பதாகச் செய்திகளைத் தொலைக்காட்சியில் பார்க்கிறோம் அதில் உயிர் தப்பியவர்கள் இருக்க மாட்டார்களா என்று நெஞ்சம் பதறுகிறது.

சாலை மறியல், போராட்டங்கள், குடும்பத் தலைவனை இழந்த உறவினர்கள் என்று கடல் நீர் உப்பைவிட, கண்ணீர் உப்பில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள் குமரி மீனவ மக்கள்.

ஆனால் அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படவில்லை பிரதமர் மோடியும், தமிழக முதல்வர் எடப்பாடியும்.

மீனவ மக்களின் உயிர்களை விட எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவைப் பெரியதாகத் தூக்கிக்கொண்டு கொண்டாட்டங்களில் மகிழ்ச்சி அடைகிறது அ.தி.மு.க.வின் எடப்பாடி அரசு.

ஆர்.கே.நகரில் அனைத்து அமைச்சர்களும் அடங்கி விட்டார்கள் தேர்தல் பணப் பட்டுவாடாவுக்காக.

பிரதமரோ எல்லாம் முடிந்தபின் எட்டிப் பார்ப்பவரைப் போல 19.12.2017இல் கன்னியாகுமரி வருகிறார்.

அதுவும் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்கவோ, அவர்கள் இருப்பிடங்களுக்குச் சென்று ஆறுதல் கூறவோ இல்லை.

அரசு விருந்தினர் மாளிகை. அங்கே ஆளுநர், முதல்வர், துணை முதல்வர், அதிகாரிகளைச் சந்திப்பாராம் மோடி மீனவ மக்களின் பாதிப்புகளைக் கேட்க.

ஏதோ போனால் போகிறது என்று மீனவப் பிரதிநிதிகள் 10 பேரையும், விவசாயப் பிரதிநிதிகள் 10 பேரையும் அதே விருந்தினர் மாளிகையில் சந்தித்துக் குறைகேட்கப் போகிறாராம் மோடி.

இதற்கு மோடி வராமலேயே இருந்திருக்கலாம்.

டெல்லியில் இருந்து கொண்டு அவர் அறிக்கை கேட்டிருந்தால் முதல்வர், அதிகாரிகள், ஆளுநர் தந்திருப்பார்களே. பிறகு ஏன் இங்கு வரவேண்டும்?

மத்தியில் மக்களுக்கான அரசு இல்லை. மக்களுக்கான பிரதமர் இல்லை, தமிழகத்தைப் போல.

இருந்திருந்தால் மோடி மக்களை நேரில் சந்தித்து மனித உணர்வைக் காட்டியிருப்பார்.

பிரதமரின் இந்தக் கன்னியாக்குமரிப் பயணம் ஆறுதலை தருவதாகவும் இல்லை, மீனவர்களின் அழுகையைத் துடைப்பதாகவும் இல்லை.

விருந்தினர் மாளிகைக்கு வரும் மோடி, பிரதமராக வருகிறாரா? விருந்தினராக வருகிறாரா? புரியவில்லை.



# ஆயிரம் பிறை கண்ட திராவிடப் பவுர்ணமி

**கவிச்சுடர் கவிதைப் பித்தன்**

தயங்கிவரும் கோழைக்கும்
தாவிவரத் தோன்றும்! இவர்
தமிழைக் கேட்டால்
புயங்களுக்குச் சிலிர்ப்பு வரும்!
புத்துணர்ச்சி நெஞ்சில் வரும்!
பொய், பூச் சுக்கு
மயங்கி வரும் இனத்துக்கு
'மருந்து' தரும் இயக்கத்தில்
மறவ னைப்போல்
இயங்கிவரும் கட்டழகர்!
எங்கள் பே ராசிரியர்
இளமை வாழ்க!

விந்தை செயப் பிறந்த மகன்!
விழிகுளிரத் தமிழ்மக்கள்
வியந்து போற்றும்
சிந்தை நிறை 'தளபதி'யின்
செயல்வேகம் அத்தனையும்
சிறக்க, "ஞானத்
தந்தை"யென வழிகாட்டித்
"தடையாவும் வெல்க" வெனத்
தமிழால் வாழ்த்தி
முந்துபுகழ் அவையத்தில்
முழங்கிய பே ராசிரியர்
மொய்ம்பு வாழ்க!

நன்றி: முரசொலி




# ஆர்.கே.நகர் தேர்தல் நடக்குமா?

**ஆர்**.கே.நகர் தொகுதியின் இடைத் தேர்தலுக்கு இன்னும் சில நாள்கள் மட்டுமே உள்ளன. இந்த நிமிடம் வரை தேர்தல் நடக்குமா, நடக்காதா என்ற விவாதம் நடந்துகொண்டே இருக்கிறது.

அந்தத் தொகுதி மக்கள், அ.தி.மு.க. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டில் வரிசையில் நின்று பணம் வாங்கும் காட்சியை ஊடகங்கள் ஒளி பரப்பின. இன்று வரையில் அதன் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

மூத்த பத்திரிக்கையாளர்கள் சிலர் கூட இதனைக் காரணம் காட்டி, இடைத் தேர்தல் நிறுத்தப்பட வேண்டும் என்று தொலைக்காட்சியில் கூறுகின்றனர்.

இது என்ன நியாயம்? தவறு செய்பவர்கள் தண்டிக்கப் பட வேண்டுமே அல்லாமல், தேர்தலை ஏன் நிறுத்த வேண்டும்? சென்ற முறை பணம் கொடுத்தார்கள் என்று கூறித்தான் தேர்தலை நிறுத்தினார்கள்.

அவர்கள் மீது இன்று வரையில் எந்த நடவடிக்கையும் இல்லை. தவறு செய்தவர்களைத் தண்டிக்க வழியின்றி தேர்தலை மட்டுமே நிறுத்துவது என்பது இயலாமையா, சூழ்ச்சியா?

ஓர் இடைத் தேர்தலைக் கூட நடத்த முடியாத நிலைக்குத் தேர்தல் ஆணையம் வந்துவிடுமானால், பிறகு பொதுத் தேர்தலை அது எப்படி நடத்தும்?

திமுகவின் வெற்றி தெளிவாகத் தெரிகிறது. ஆர்.கே.நகர் தொகுதியைப் பொறுத்தளவு, இரண்டாம் இடம் யாருக்கு என்பதற்கான போட்டிதான் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திமுக வெற்றிபெற்றுவிடக் கூடாது, அ.தி.மு.க. மூன்றாம் இடத்துக்குப் போய்விடக் கூடாது என்று கருதுகிறவர்கள் தேர்தலை நிறுத்திவிட வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள்.

அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள பா.ஜ.க.வினர் இம்முறை அதில் வெற்றி பெற முடியாது. தேர்தலில் அவர்கள் தமிழ் நாட்டில் எக்காலத்திலும் வெற்றிபெற முடியாது.

●

# பாஜக வென்றுள்ளதா?

**ச**வுராஷ்டிரா, கட்ச் பகுதிகளில் அந்தக் கட்சி (பாஜக) கணிசமான அளவு தொகுதிகளை இழந்துள்ளது. ஏராளமான தொகுதிகளில் சொற்ப ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். சமீபத்தில் மோடி பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடத்திய போர்பந்தர் தொகுதியில் 1850 சொச்சம் வாக்கு வித்தியாசத்தில்தான் அந்தக் கட்சி போராடி வென்றிருக்கிறது.



மத்தியிலும் மாநிலத்திலும் அதிகாரத்தில் இருக்கும் அந்தக் கட்சி இருபதுக்கும் மேற்பட்ட தொகுதிகளை இழந்திருக்கிறது என்றால் அது பாஜகவுக்குக் கிடைத்த தோல்விதான்! **- ஜிக்னேஷ் மேவானி**

(இவர், குஜராத் தேர்தலில், காங்கிரஸ் ஆதரவோடு சுயேச்சையாகப் போட்டியிட்டு, பெரும் வெற்றியினைப் பெற்றுள்ளார்.)

# நான் துப்புரவுத் தொழிலாளி

**● வெற்றிச் செல்வன்**



➔ மூத்திரச் சந்தின்
முற்றிய நெடிகளில்
சுப்ரபாதம்
எங்களுக்குச் சாத்தியமாகிறது.


காமுகர்களின் ஆணுறைகளிலும்
கருவறையின் 'நேப்கின்'களிலும்
எங்கள்
காலைக் கனவுகள்
கலைகின்றன.
எத்தனையோ மலக்குழிகள்
எங்களின்
மரணக்குழிகளாகி
இருக்கின்றன.

நிலவறையின் கல்லறைகளில்
எங்கள்
நிகழ்காலம் புதைக்கப்படுகின்றது.
உங்கள் குடல்குப்பை
அள்ளாமல் எங்கள்
குடல்நிறைய
வாய்ப்பில்லை.
பாவங்களை ஏற்றுக்கொண்டு
பக்தர்களை ரட்சிப்பது
பரமபிதா மட்டுமல்ல...

எங்களை அழுக்காக்கி
உங்களைச்
சுத்தப்படுத்தும்
நாங்களும் தான்!

# ஜி.யூ.போப்

## மறக்க முடியுமா?



● எழில்.இளங்கோவன்

ஏப்ரல் 24ஆம் நாள் 1820ஆம் ஆண்டு, கனடா நாட்டின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் பிறந்தார் ஜி.யூ.போப். இவரின் பெயர் (Georg Uglow) ஜார்ஜ் யூக்லோ.

இவரின் தாயார் கேதரின் யூக்ளோ. தந்தை ஜான்போப்.

1826ஆம் ஆண்டு, இவர்கள் குடும்பம் கனடாவில் இருந்து இங்கிலாந்தில் குடியேறியது. அப்போது ஜி.யூ.போப்பின் வயது 6.

இங்கிலாந்தில் ஹாக்ஸ்டன் கல்லூரியில் பயின்ற இவர், தன் 19ஆம் வயதில் 1839 ஆம் ஆண்டில் தமிழகம் வந்தார் கப்பல் மூலமாக.

இலண்டன் பைபிள் சங்கத்தில் சேர்ந்து, கிருத்துவ சமயப் பணிக்காக வந்த போப் சென்னை சாந்தோமில் தங்கினார்.

சென்னையில் இருந்த இங்கிலாந்து, கிருத்துவத் திருச்சபையில் சேர்ந்து, அங்கு ‘குரு‘ பட்டம் பெற்றார். பின்னர் சமயப்பணி ஆற்றும் பொருட்டு இவர், தூத்துக்குடி அருகில் உள்ள சாயர்புரம் என்ற சிற்றூருக்குச் சென்றார்.

அங்கே இராமானுஜக் கவிராயரிடமும், ஆரியங்காவுப் பிள்ளையிடமும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் திரிபறக் கற்றார். இத்துடன் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

1850ஆம் ஆண்டு இங்கிலாந்து திருப்பிய போப் அங்கு திருமணம் செய்து கொண்டு தமிழகம் வந்தபோது, அவர் நேராகத் தஞ்சாவூர் சென்று அங்கு தங்கிச் சமயப்பணி ஆற்றத் தொடங்கினார்.

அங்கு இவர் சமயப்பணி ஆற்றிக் கொண்டு இருந்த நிலையில், இவருக்கு முன் ஒரு பிரச்சனை உருவெடுக்கத் தொடங்கியது.

ஏற்கனவே அங்கு இருந்த கிருத்துவர்களும், ஜி.யூ.போப் சமயப்பணியால் கிருத்துவர்களாக ஆக்கப் பட்டவர்களும் போப்பிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தனர்.

அதாவது தாங்கள் கிருத்துவர்களாக மாறும்முன் இந்து உயர்சாதியினராக இருந்தவர்கள். இப்பொழுது கிருத்துவர்களாக மாறி இருக்கிறார்கள்.

ஆகவே இவர்களுக்கு உயர் சாதிய முன்னுரிமை அங்கீகாரம் வழங்கவேண்டும் என்றும் தாழ்த்தப்பட்ட பிற மதம் மாறிய கிருத்துவ மக்களை இவர்களுக்கு இணையாக வைக்கக் கூடாது என்றும் இவர்கள் கோரினார்கள்.

இந்த சாதிய வர்ணாசிரமக் கோரிக்கை கிருத்துவ மதத்திற்குள் நுழைவதை விரும்பாத ஜி.யூ.போப் அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.

இறைவனின் முன் அனைத்து மக்களும் சமமானவர்களே. சாதியை வைத்து உயர்வு தாழ்வு பார்ப்பதை நான் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டேன் என்று உறுதியாய்ச் சொல்லிவிட்டார்.

ஆனால் அவருக்கு மேலிருந்த கிருத்துவச் சபையின் தலைமை, உயர்சாதிக் கிருத்துவர்கள் பக்கம் சார்ந்து நின்றது.

சபைத் தலைமையின் இச் சாதியச் சார்பு நிலையை ஏற்க மறுத்த போப் அவர்கள், தலைமைச் சபைக்கு எதிராக வைத்த கருத்துகள் பயனற்றுப் போயின.

எனவே 16 ஆண்டுகள் தஞ்சையில் சமயப் பணி செய்த அவர், அச்சபையில் இருந்து விலகல் கடிதம் கொடுத்துவிட்டு தன் குடும்பத்துடன் உதகமண்டலம் சென்றார்.

அங்கு ஐரோப்பிய மாணவர்களுக்கு பாடங்கள் எடுத்தார். தமிழ் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். அங்கு சமயப் பணிகளையும் செய்யத் தவறவில்லை அவர்.

உதகையில் பலரைச் சந்தித்து, ஒரு கூட்டு முயற்சியில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவினார் ஜி.யூ.போப்.

அத்தோடு பழைய தமிழ் நூல்களைத் தேடிப் படித்தார். தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடிச் சேகரித்த அவர் அவைகளை ஆய்வு செய்யவும் தொடங்கினார்.

இவரின் சமயப்பணியுடன் இணைந்த கல்விப் பணிக்காக இங்கிலாந்து கிருத்துவத் திருச்சபை இவருக்கு ‘மறை நூல் புலவர்’ என்ற பட்டத்தை வழங்கியது.

பின்னர் உதகையில் இருந்து 1871ஆம் ஆண்டு பெங்களூர் சென்று சமய, கல்விப் பணியை பதினொரு ஆண்டுகள் தொடர்ந்து செய்தார்.

அவரின் 62ஆம் வயதில் ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக 1882 ஆம் ஆண்டு அவர் இங்கிலாந்து திரும்பினார்.

இங்கிலாந்து ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் 1885 முதல் 1908ஆம் ஆண்டு வரை பேராசிரியராகப் பணியாற்றினார். அப்பொழுது ஆங்கிலேய மாணவர்களுக்குத் தமிழ் மொழிப் பாடங்களைப் பயிற்றுவித்துள்ளார்.

1886ஆம் ஆண்டு திருக்குறளை ‘Sacred Kural’ என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை நாலடியார் ஆகிய இலக்கிய நூல்களின் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இதழ்களில் பதிப்பித்து இருக்கிறார்.

திருவருட்பா, தேவாரம் ஆகிய நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார். சிவஞானபோதத்தைப் படித்த ஜி.யூ.போப் அவர்கள், அதனை முழுமையாக மொழிபெயர்க்க விரும்பி இருந்தார். ஆனால் சில பாடல்கள் மொழி பெயர்ப்புடன் அப்பணி முற்றுப் பெறமல் போய்விட்டது எனத் தெரிகிறது.

தமிழ் இலக்கணங்களுடன், செய்யுள்களைத் தொகுத்துச் ‘செய்யுள் கலம்பகம்’ என்ற நூலைத் தொகுத்தெழுதி இவரே அதை வெளியிட்டுள்ளார்.

கணியன் பூங்குன்றனாரின் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பாடலையும், புலவர் இளம்பெருவழுதியின் “உண்டாலம்ம இவ்வுலகம்” என்ற பாடலையும் ஆங்கித்தில் மொழிபெயர்த்த இவர், அதை அச்சிலும் கொண்டுவந்துள்ளார்.

ஜி.யூ.போப் அவர்களின் தமிழ்ப் பணியினைப் பாராட்டி இராயல் எசியாடிக் சொசைட்டி இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கிப் பெருமைப் படுத்தி இருக்கிறது.

ஜி.யூ.போப் எழுதிய சில நூல்கள்

1. தமிழ்ச் செய்யுள் கலம்பகம், 2. Extracts from Puranaanooru to Purapporul Venbaa malai, 3. Elementary Tamil Grammer, 4. The Lives of Tamil Siants

இதழ்கள்

1. Royal Asiatic Quarterly, 2. The Indian Magazine, 3. Siddhantha Deepika

ஜி.யூ.போப் தன் மரணத்திற்கு முன்னர் மூன்று விருப்பங்களைப் பதிவு செய்திருத்திருக்கிறார்.

1. தன் கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறு தொகை தமிழ் மக்களின் நன்கொடையாக இருக்கவேண்டும் என்று விரும்பினர். போப்பின் மரணத்தை அடுத்து, பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் செல்வக் கேசவனார் தமிழ் அன்பர்களிடம் நன்கொடை பெற்று அதை இங்கிலாந்துக்கு அனுப்பியுள்ளார்.

2. தன் கல்லறையில் தன் உடலுடன் தன்னால் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள், திருவாசகம் இரண்டையும் வைத்து அடக்கம் செய்ய வேண்டும்.

3. “இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக்கொண்டு இருக்கிறான்” என்று தன் கல்லறைமீது பொறிக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இந்த கடைசி ஆசை நிறைவேறவே இல்லை. அவரின் கல்லறையில் மேற்சொன்ன வாசகம் எழுதப்படவில்லை.

1908 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12ம் நாள் தன் 88ஆம் வயதில் பெருந்தகை ஜி.யூ.போப் ‘தமிழ் மாணவனாகவே’ தன் நெடிய துயிலை ஏற்றுக்கொண்டார்– இங்கிலாந்து மத்திய ஆக்ஸ்போர்ட் பகுதியில் உள்ள செயின்ட் செபல்கரிஸ் கல்லறையில். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.